


நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ல், வாக்குப்பதிவு நாளான மே 16 அன்று தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரும் மாவட்ட தேர்தல் அலுவலருமான திரு. சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., தேர்தல் பார்வையாளர்கள் திருமதி. ருனு கோஷ் இ.ஆ.ப., திரு. நாராயண சர்க்கார் இ.ஆ.ப., திரு. பிஷ்னு பாதா சேத்தி இ.ஆ.ப., ஆகியோர்கள் முன்னிலையில், கணினி மூலம் 1688 வாக்குச்சாவடிகளுக்கு கலக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கணிப்பொறி அறையில் இன்று (14.05.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 283/2016 நாள்: 14.05.2016

**வாக்குச்சாவடி அலுவலர்களை வாக்குச்சாவடி வாரியாக கணினி மூலம் கலக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி.**
**மாவட்ட ஆட்சித்தலைவரும் மாவட்ட தேர்தல் அலுவலருமான திரு. சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேர்தல் பார்வையாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது.**

நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ல், வாக்குப்பதிவு நாளான மே 16 அன்று தேர்தல் பணியில் ஈடுபடும் வாக்குச்சாவடி அலுவலர்களை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரும் மாவட்ட தேர்தல் அலுவலருமான திரு. சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேர்தல் பார்வையாளர்கள் திருமதி. ருனு கோஷ் இ.ஆ.ப., திரு. நாராயண சர்க்கார் இ.ஆ.ப., திரு. பிஷ்ணு பாதா சேத்தி இ.ஆ.ப., ஆகியோர்கள் முன்னிலையில், கணினி மூலம் 1688 வாக்குச்சாவடிகளுக்கு கலக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யும் பணி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கணிப்பொறி அறையில் இன்று (14.05.2016) நடைபெற்றது.

பின்னர் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரும் மாவட்ட தேர்தல் அலுவலருமான திரு. சஜ்ஜன்சிங் ரா சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தலில், தேர்தல் பணியில் ஈடுபடும் 8,674 அரசு அலுவலர்களை ஏப்ரல் 20-ம் தேதி நடைபெற்ற முதல் சுற்று கலக்கல் முறையில் வாக்குச்சாவடி முதன்மை அலுவலர், வாக்குச்சாவடி அலுவலர்கள் (நிலை 1 முதல் 5 வரை) ஆகியோர்களை தேர்ந்தெடுக்கப்பட்டு, பயிற்சி வழங்கப்பட்டது. பின்னர் மே 4-ம் தேதி நடைபெற்ற இரண்டாவது சுற்று கலக்கல் முறையில் அந்த அலுவலர்களை தொகுதிவாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டது. மேலும் இன்று மூன்றாவது முறையாக வாக்குச்சாவடி வாரியாக ஒதுக்கீடு செய்யும் பணி தேர்தல் பொது பார்வையாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதியில் உள்ள 300 வாக்குச்சாவடிகளுக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (PO5) 351 என 1838 அலுவலர்களும், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் உள்ள 274 வாக்குச்சாவடிகளுக்கு 1356 அலுவலர்களும், குளச்சல் சட்டமன்ற தொகுதியில் உள்ள 297 வாக்குச்சாவடிகளுக்கு 1459 அலுவலர்களும், பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள 268 வாக்குச்சாவடிகளுக்கு 1319 அலுவலர்களும், விளவங்கோடு சட்டமன்ற தொகுதியில் உள்ள 272 வாக்குச்சாவடிகளுக்கு 1341 அலுவலர்களும், கிள்ளியூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள 277 வாக்குச்சாவடிகளுக்கு 1360 அலுவலர்கள் என மொத்தம் ஆறு சட்டமன்ற தொகுதியில் உள்ள 1688 வாக்குச்சாவடி மையங்களுக்கு 8,674 வாக்குச்சாவடி அலுவலர்கள் (அரசு அலுவலர்கள்) வாக்குப்பதிவு நாளான மே 16 அன்று தேர்தல் பணியில் ஈடுபடுவார்கள். இவர்களுக்கு இறுதிகட்ட பயிற்சி நாளை நடைபெறவுள்ளது என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி. மீனாட்சி, தேர்தல் தனி வட்டாட்சியர் திரு.சுப்பிரமணியன், தேர்தல் அலுவலர் (பயிற்சி) திரு.ரவி உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.